ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2207/7 - 2020 දෙසැම්බර් මස 23 වැනි බදාදා - 2020.12.23

*2207/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்*

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

*ச.வ.பி. 25/1973.*

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின்கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நாமல் ராஜபக்ஷ,**
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2020, திசெம்பர் 14.*

1A - G 33361 — 520 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஒழுங்குவிதிகள்

காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் தேதிய 1990/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுக்கள் சங்கங்கள் ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 8 ஆம் ஒழுங்குவிதியினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன்மூலமும்:-

"8. (1) (அ) ஒரு பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்றின் ஏதேனும் முடிபொன்றினால் அல்லது நடவடிக்கை ஒன்றினால் இன்னலுற்ற எவரேனும் ஆள் அத்தகைய முடிபினை அல்லது நடவடிக்கையினைப் பெற்றுக்கொண்ட ஏழு நாட்களினுள் அமைச்சருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(ஆ) அத்தகைய மேன்முறையீடானது மேன்முறையீட்டுக்கு ஆதாரமான இயைபான எல்லா ஆவணங்களையும் மற்றும் விளையாட்டுக்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பாக செலுத்தப்பட்ட (ஆட்டக்காரர்களின் தெரிவு பற்றிய மேன்முறையீடுகள் தவிர) மீளப் பெறப்படமுடியாத ஐயாயிரம் ரூபா கொடுப்பனவின் பற்றுச்சீட்டினையும் சேர்த்து செய்யப்படல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டினைப் பெற்றுக்கொண்டதன்மேல், அமைச்சர் இவ்வொழுங்குவிதியின் 3 ஆம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மேன்முறையீட்டு மதியுரைக் குழுவிற்கு அத்தகைய மேன்முறையீட்டினை ஆற்றுப்படுத்தலாம்.

(3) (அ) அமைச்சர், மேன்முறையீட்டினைக் கவனத்திற்கெடுப்பதற்கும் அவருக்கு அதன்மீதான விதப்புரைகளைச் செய்வதற்கும் என ஏழு உறுப்பினர்களைக்கொண்ட மேன்முறையீட்டு மதியுரைக் குழுவினைத் தாபிக்கலாம். அமைச்சர், அத்தகைய குழுவின் உறுப்பினர்களினால் வழங்கப்பட்ட விதப்புரைகளில் எதற்கும் கட்டுப்பட்டவராதல் ஆகாது.

(ஆ) (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மேன்முறையீட்டு மதியுரைக் குழுவானது இலங்கை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரையும், சட்டத்துறையில் பரந்த அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டுள்ள ஆட்களையும் அத்துடன் இலங்கையில் விளையாட்டுக்களை விருத்திசெய்வதற்காக பங்களிப்புச் செய்துள்ள ஆட்களையும்கொண்ட குழாம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இலங்கை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தவிசாளர் சமுகமளிக்காதபோது, உறுப்பினர்கள் கூட்டத்திற்கு தலைமைதாங்குவதற்கென உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(ஈ) அமைச்சர் குழுவிற்கு மேன்முறையீடொன்றை ஆற்றுப்படுத்துகின்றவிடத்து, தவிசாளர் மேன்முறையீட்டினை ஆற்றுப்படுத்திய திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அமைச்சருக்கு அத்தகைய மேன்முறையீடு பற்றி கவனத்திற்கெடுத்து விதப்புரைகளைச் செய்வதற்கு குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்.

(4) அமைச்சர், மேன்முறையீடு பற்றிய எல்லா இயைபான நிகழ்வுகளையும் கவனத்திற்கொண்டு, அத்தகைய மேன்முறையீட்டினைப் பெற்ற ஒருமாத காலத்தினுள் மேன்முறையீட்டாளருக்கும் இயைபான தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கும் அதற்கான காரணங்களுடன் தனது முடிபை அறிவித்தல் வேண்டும்.".

(2) பத்தாம் ஒழுங்குவிதியில் "ஊழல்" என்னும் சொல்லமைப்பினை உடனடுத்துப் பின்வரும் சொல்லமைப்பினை உட்புகுத்துவதன் மூலமும்:-

" " விளையாட்டுக்கள் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, விளையாட்டுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விளையாட்டுக்கள் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;".

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.